004/DD/20

T.C-102

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS – PAPER – I (AUDIT OF LOCAL BODIES/UNIVERSITIES AND OTHER AUDITABLE INSTITUTIONS)

(Without Books)

Maximum Time : 1.30 hours — Maximum Marks : 60

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 60 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
   இவ்வினாத்தாள் 60 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Which one of the following is not related to standing committee in Greater Chennai Corporation?

(A) Committee for Town Planning

(B) Committee for works

(C) Committee for Accounts and Audit

(D) Committee for Appointment

கீழ்கண்டவற்றுள் சென்னை பெரு மாநகர நிலைக்குழுவுடன் தொடர்பு இல்லாதது எது?

(A) நகரத் திட்டத்திற்கான குழு (B) வேலைகளுக்கான குழு

(C) கணக்கு மற்றும் தணிக்கைக்கான குழு (D) பணியமர்த்தலுக்கான குழு

2. What is the rate of discount allowed for buildings with temporary roof while calculating property tax in Greater Chennai Corporation?

(A) 25 (B) 30

(C) 20 (D) 10

சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தற்காலிக மேற்கூரை கொண்டுள்ள கட்டிடங்களுக்கு ———————— சதவீத தள்ளுபடி அனுமதித்து சொத்துவரி மதிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) 25 (B) 30

(C) 20 (D) 10

3. Lease notices should be prepared before ———————— of every year and approved by the Council?

(A) January 2015 (B) February 2015

(C) March 2015 (D) April 2015

நகராட்சியால் ஏலம் விடுதலில் ஏல அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் ————————ஆம் தேதிக்கு முன் தயாரிக்கப்பட்டு, மன்ற ஒப்புதல் பெறப்படுகின்றது.

(A) ஜனவரி 2015 (B) பிப்ரவரி 2015

(C) மார்ச் 2015 (D) ஏப்ரல் 2015

4. What is the maximum percentage of water tax component in a property tax?

(A) 30% (B) 35%

(C) 40% (D) 45%

ஒரு ஆண்டிற்குரிய சொத்துவரியில் அதன் உட்கூறான குடிநீர்வரி இருக்க வேண்டிய உச்சபட்ச விழுக்காடு அளவு எது?

(A) 30% (B) 35%

(C) 40% (D) 45%

5. What is the percentage of penalty to be collected along with lease amounts instalments in case of delayed payment?

(A) 17% (B) 18%

(C) 19% (D) 20%

ஏலம் எடுக்கப்பட்டு தவணைகளை உரிய காலத்தில் செலுத்தாதவர்களிடமிருந்து எத்தனை சதவீதம் தண்ட வட்டியுடன் வசூலிக்கப்பட வேண்டும்?

(A) 17% (B) 18%

(C) 19% (D) 20%

6. Which is the other name of Income and Expenditure account?

(A) Asset and liability (B) Statement of Financial performance

(C) Cash flow chart (D) Receipts and Payments account

வரவினம் மற்றும் செலவினக் கணக்கின் மற்றொரு பெயர் என்ன?

(A) சொத்து மற்றும் பொறுப்பு (B) பணப்பாய்வு பற்றிய அறிக்கை

(C) பணப்பாய்வு வரைபடம் (D) வரவின (ம) செலவின கணக்கு

7. If the extent of layout is more than ———— the proposal shall be sent to the head office Chennai for the technical approval.

(A) 4 acres (B) 5 acres

(C) 8 acres (D) 9 acres

அமைவிட திட்ட வரைபடம் ————க்கு அதிகமாகும் போது அதற்கான தொழில்நுட்ப அங்கீகார முன்மொழிவு சென்னை தலைமையகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்?

(A) 4 ஏக்கர் (B) 5 ஏக்கர்

(C) 8 ஏக்கர் (D) 9 ஏக்கர்

8. Appeals regarding taxes in corporation shall be filed to

(A) Tribunal (B) Taxation appeal committee

(C) Council (D) Government

மாநகராட்சிகளில் வரிகள் மீதான மேல்முறையீடு யாருக்கு செய்ய வேண்டியது?

(A) தீர்ப்பாயம் (B) வரி மேல்முறையீட்டு குழு

(C) மாமன்றம் (D) அரசு

9. In property tax calculation what is the discount for 25 years old building?

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

சொத்துவரி கணக்கிடுதலில் 25 வருடங்களுக்கு அதிகமான கட்டிடங்களுக்கு அளிக்கப்படும் தள்ளுபடி

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

10. Regarding general revision of property tax 2018 which of the following G.O. is the latest issued by municipal administration and water supply department?

(A) 73 (B) 76

(C) 78 (D) 80

சொத்துவரி சீராய்வு 2018-யினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கும் துறையால் கடைசியாக வெளியிடப்பட்ட அரசாணை எண்

(A) 73 (B) 76

(C) 78 (D) 80

11. The fuel expenditure for block development officer (Village Panchayat) vehicle is to be meet out from

(A) General fund
(B) State Finance Commission
(C) Both General fund and SFC
(D) Thai Thittam

ஊராட்சி ஒன்றியத்தில் திட்டப்பிரிவு வளர்ச்சி அலுவலரின் வாகனத்திற்கு எரிபொருள் செலவினம் எந்த நிதியிலிருந்து செலவிடப்பட வேண்டும்?

(A) பொது நிதி
(B) மாநில நிதிக்குழு மானியம்
(C) பொது மற்றும் மாநில நிதிக்குழு மான்யம்
(D) தாய் திட்டம்

12. A lapsed deposit can be refunded after allowed by council resolution before the expiry of ———— from the date of lapse deposit.

(A) 6 years only
(B) 9 years only
(C) 7 years only
(D) 8 years only

காலாவதியான வைப்புத் தொகையினை காலாவதியான நாளிலிருந்து எத்தனை ஆண்டுகள் வரை மன்றத்தின் அனுமதி பெற்று வழங்கலாம்.

(A) 6 ஆண்டுகள் வரை
(B) 9 ஆண்டுகள் வரை
(C) 7 ஆண்டுகள் வரை
(D) 8 ஆண்டுகள் வரை

13. For every year calculation of particular percentage of depreciation on the rate of net value of property is called

(A) Straight line method
(B) Depreciation for land
(C) Return down method
(D) None of these

ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நிகர மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தேய்மானமாக கருதப்படுகிறது.

(A) நேர்கோடு முறை கணக்கீடு
(B) நிலத்திற்கான தேய்மானம்
(C) இறங்குமுக மதிப்பு முறை
(D) இவற்றில் ஏதுமில்லை

14. In Brick work the check measurement shall be done at the stage of

(A) after RCC
(B) during Brick work
(C) before painting
(D) before plastering

செங்கல் கட்டுமான வேலையில் மேல் அளவு செய்யப்பட வேண்டிய நிலை

(A) ஆர்.சி.சி. வேலை முடிந்த பின்பு
(B) செங்கல் கட்டுமான வேலையின் போது
(C) வர்ணம் பூசும் போது
(D) பூச்சு வேலை செய்வதற்கு முன்

15. In corporation tender advertisement shall be made in one English daily and one Tamil Daily Newspaper in State level works costing a value of

(A) above 10 lakhs and upto 25 lakh

(B) above 25 lakhs and upto 100 lakhs

(C) above 100 lakhs and upto 200 lakhs

(D) above 500 lakhs

மாநகராட்சிகளில் எந்த தொகைக்குட்பட்ட ஒப்பந்தப்புள்ளியானது மாநில அளவில் ஒரு ஆங்கில தினசரி பத்திரிகை மற்றும் மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி பத்திரிக்கையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

(A) 10 இலட்சத்திற்கு மேல் 25 இலட்சத்திற்குள்

(B) 25 இலட்சத்திற்கு மேல் 100 இலட்சத்திற்குள்

(C) 100 இலட்சத்திற்கு மேல் 200 இலட்சத்திற்குள்

(D) 500 இலட்சத்திற்கு மேல்

16. What is the grade of a Town Panchayat whose annual income is more than 100 lakhs but less than 160 lakhs?

(A) Selection grade
(B) Special grade
(C) Grade - 1
(D) Grade - 2

ஆண்டு வருமானம் 100 இலட்சத்திற்கு அதிகமாகவும், 160 இலட்சத்திற்கு குறைவாகவும் உள்ள பேரூராட்சி எந்த தரத்தில் வைக்கப்படுகிறது.

(A) தேர்வு நிலை
(B) சிறப்பு நிலை
(C) முதல் நிலை
(D) இரண்டாம் நிலை

17. What is the bus bay fee collected for a Grade - C bus stand by a local body?

(A) Rs.15/-
(B) Rs.12/-
(C) Rs.8/-
(D) Rs.5/-

தரம் "சி" கொண்ட பேருந்து நிலையத்திற்குள் நுழையும் பேருந்துகளுக்கு பேரூராட்சியால் வசூலிக்கப்படும் பேருந்து கட்டணம்

(A) ரூ.15/-
(B) ரூ.12/-
(C) ரூ.8/-
(D) ரூ.5/-

18. In municipality the percentage of loss ordered to be recovered from the bill collector in the Time barred arrear of Taxes

(A) 10% of loss (B) 20% of loss

(C) 30% of loss (D) 40% of loss

நகராட்சியில் வசூலிக்கப்படாமல் காலாவதியான வரி இனங்களில் வரித்தண்டலரிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட விதிக்கப்படும் தொகை

(A) 10% இழப்பில் (B) 20% இழப்பில்

(C) 30% இழப்பில் (D) 40% இழப்பில்

19. From which half year the property tax shall be collected from the private educational institution as per tax of Tamilnadu Municipality Act 2018 ($2^{nd}$ amendment 2018) Act / Tamilnadu act section 123 C

(A) From 01.04.2017 (B) From 01.10.2017

(C) From 01.04.2018 (D) None of these

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (2ம் திருத்தம்) சட்டம் 2018 (2018 / தமிழ்நாடு சட்டம் 6)-இல் பிரிவு 123 சி-இன்படி தனியார் கல்வி நிறுவனங்களுக்கு எந்த அரையாண்டு முதல் சொத்துவரி வசூலிக்கப்பட வேண்டும்.

(A) 01.04.2017 முதல் (B) 01.10.2017 முதல்

(C) 01.04.2018 முதல் (D) இவற்றில் ஏதுமில்லை

20. According to C.M.A. Circular 37667/92/R 1, Dated 23.06.1993 how much amount should be recovered from executive officer for Time barred Tax & Fees.

(A) 20% (B) 30%

(C) 40% (D) 50%

சி.எம்.எ. சுற்றறிக்கை 37667/92/ஆர் 1, நாள் 23.06.1993-இன் படி காலங்கடந்த வரி மற்றும் கட்டணங்களுக்காக செயல் அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய சதவீத அளவு

(A) 20% (B) 30%

(C) 40% (D) 50%

21. Of the following who is not liable to pay entertainment tax as per Tamilnadu local authorities entertainment tax act 2017?

(A) Cinema Theatre Owner
(B) Recreation Forum
(C) Cable TV operator
(D) Amusement park

தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார கேளிக்கை வரி சட்டம் 2017-இன் படி கீழ்கண்ட எந்த நபரிடமிருந்து கேளிக்கை வரி வசூலிக்கப்படுவதில்லை

(A) சினிமா தியேட்டர் உரிமையாளர்
(B) மனமகிழ் மன்ற உரிமையாளர்
(C) கேபிள் டி.வி. ஆபரேட்டர்
(D) கேளிக்கை பூங்கா

22. With effect from which date manual workers welfare fund is deducted at the rate of 1% estimates as per G.O. 295/Labour & Employment department, Dated 17.12.2013?

(A) From 17.12.2013
(B) From 01.04.2013
(C) From 01.10.2013
(D) None of these

அரசாணை எண், 295/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை / நாள் 17.12.2013-இன் படி எந்த தேதியிலிருந்து கட்டுமானப் பணிகளுக்கு தொழிலாளர் நலநிதி 1 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது.

(A) 17.12.2013 முதல்
(B) 01.04.2013 முதல்
(C) 01.10.2013 முதல்
(D) இதில் ஏதுமில்லை

23. In Which of the following G.O.s the ceiling amount was fixed for the expenditure for carrying repairs and maintenance of municipal vehicles?

(A) G.O.No.983/Home/Transport Dept/Dt.03.08.04
(B) G.O.No.960/Home/Transport Dept/Dt.12.04.99
(C) G.O.No.186/Home/Transport Dept/Dt.24.01.1980
(D) None of these

உள்ளாட்சி நிறுவனங்களில் உள்ள வாகனங்களுக்கான பழுது நீக்க பணிகளுக்கான உச்சவரம்பு செலவுத் தொகை எந்த அரசாணையின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?

(A) அரசாணை எண். 983/உள்/போக்குவரத்துத் துறை/நாள் 03.08.04
(B) அரசாணை எண். 960/உள்/போக்குவரத்துத் துறை/நாள் 12.04.99
(C) அரசாணை எண். 186/உள்/போக்குவரத்துத் துறை/நாள் 24.01.1980
(D) இவற்றில் ஏதுமில்லை

24. Which of the following statement is wrong about a statement of cash flow?

(A) all income earned necessarily be collected in cash

(B) all income earned need not be collected in cash

(C) it reflects all cash inflows and outflows of recurring and non recurring activities

(D) none of these

பணப்பாய்வு அறிக்கையில் கீழ்காணும் எந்த கூற்று தவறு?

(A) அனைத்து வரவினங்களும் கண்டிப்பாக பணமாக மட்டும் வசூலிக்கப்பட வேண்டும்

(B) அனைத்து வரவினங்களும் பணமாக வசூலிக்க வேண்டிய அவசியமில்லை

(C) இது தொடர்ச்சியான / தொடர்ச்சியில்லா நிகழ்வுகளின் அனைத்து உள்வரும் மற்றும் வெளி செல்லும் பணப்பாய்வினை வெளிப்படுத்துகிறது

(D) இவற்றில் ஏதுமில்லை

25. Which one is correct statement in seven digit code?

(A) Major head – 2 digits
Minor head – 3 digits
Detailed head – 2 digits

(B) Major head – 2 digits
Minor head – 2 digits
Detailed head – 3 digits

(C) Major head – 3 digits
Minor head – 3 digits
Detailed head – 1 digit

(D) Major head – 3 digits
Minor head – 2 digits
Detailed head – 2 digits

ஏழு இலக்க எண் கணக்கில் கீழ்காணும் எந்த கூற்று சரி?

(A) பெருந்தலைப்பு – 2 எண்கள்
குறுந்தலைப்பு – 3 எண்கள்
விரிவான தலைப்பு – 2 எண்கள்

(B) பெருந்தலைப்பு – 2 எண்கள்
குறுந்தலைப்பு – 2 எண்கள்
விரிவான தலைப்பு – 3 எண்கள்

(C) பெருந்தலைப்பு – 3 எண்கள்
குறுந்தலைப்பு – 3 எண்கள்
விரிவான தலைப்பு – 1 எண்

(D) பெருந்தலைப்பு – 3 எண்கள்
குறுந்தலைப்பு – 2 எண்கள்
விரிவான தலைப்பு – 2 எண்கள்

26. In seven digit account system Major head code 110 represent about

(A) Tax

(B) Other income

(C) Fees and user charges

(D) Interest earned

ஏழு இலக்க எண்கள் கணக்கில் பெருந்தலைப்பு 110 எதைக் குறிக்கிறது?

(A) வரியினங்கள்

(B) இதர வரவினம்

(C) கட்டணம் (ம) பயனாளர் கட்டணம்

(D) வங்கி வட்டி ஈட்டியது

27. In Corporation the ceiling limit fixed for the celebration of Republic day / Independence day is

(A) 1000 (B) 1500

(C) 2500 (D) 3000

மாநகராட்சியில் குடியரசு தினம் / சுதந்திர தின விழாவிற்கு கொண்டாடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு தொகை

(A) 1000 (B) 1500

(C) 2500 (D) 3000

28. Tamilnadu Local fund audit rules – 2016 come into force w.e.f.

(A) 24.08.2016 (B) 24.07.2016

(C) 15.08.2016 (D) 01.04.2016

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016 அமலுக்கு வந்த நாள்

(A) 24.08.2016 (B) 24.07.2016

(C) 15.08.2016 (D) 01.04.2016

29. Duration period for colour and white washing at a building can be done

(A) Once in 3 years (B) Once in a year

(C) Once in 5 years (D) Once in 6 years

கட்டிடங்களுக்கு வண்ணப்பூச்சு மற்றும் வெள்ளைப்பூச்சு வேலைகளின் கால அவகாசம்

(A) 3 வருடத்திற்கு ஒரு முறை (B) ஒவ்வொரு வருடமும்

(C) 5 வருடத்திற்கு ஒரு முறை (D) 6 வருடத்திற்கு ஒரு முறை

30. The audit fees for Municipal Corporation is

(A) 25% of actual cost (B) 50% of actual cost

(C) 40% of actual cost (D) 60% of actual cost

மாநகராட்சியின் தணிக்கைக் கட்டணமானது

(A) உண்மை செலவினத்தில் 25% (B) உண்மை செலவினத்தில் 50%

(C) உண்மை செலவினத்தில் 40% (D) உண்மை செலவினத்தில் 60%

31. What is the annual rent to be collected by town panchayat or using its street light poles for installation of tell television cables as per G.O.Ms.No.80-MAWS (MCI) Dept, Dated 30.06.2014

(A) Rs.6,050/Year/Km (B) Rs.6,500/Year/Km

(C) Rs.18,987/Year/Km (D) Rs.18,500/Year/Km

அரசாணை நிலை எண். 80/ந.நி.கு.வ.துறை/நாள், 30.06.2014 -இன் படி பேரூராட்சிகளில் உள்ளாட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு கம்பங்கள் மூலம் கொண்டு செல்லும் கம்பி வடங்களுக்கான தட வாடகை

(A) ரூ.6,050/ஆண்டு/கி.மீ. (B) ரூ.6,500/ஆண்டு/கி.மீ.

(C) ரூ.18,987/ஆண்டு/கி.மீ. (D) ரூ.18,500/ஆண்டு/கி.மீ.

32. As per Tamilnadu Transparency in Tenders rules 2000 what is the minimum time period allowed between publication of notice inviting tender and submission of tender for tenders to excess of Rs.2 crores.

(A) 10 days (B) 20 days

(C) 30 days (D) 40 days

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000-இன் படி 2 கோடிக்கு அதிகமான மதிப்பீடு உடைய இனங்களில் ஒப்பந்தப்புள்ளி செய்தி தாள்களில் கோரும் அறிவிப்பிற்கும், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நாளுக்கும் இடையே இடைவெளி இருக்க வேண்டியது

(A) 10 நாட்கள் (B) 20 நாட்கள்

(C) 30 நாட்கள் (D) 40 நாட்கள்

33. Which section of Greater Chennai Corporation Act 1919 deals with Timber tax?

(A) Section 125 (B) Section 127

(C) Section 129 (D) Section 130

பெருநகர சென்னை மாநகராட்சி விதி 1919-இன் எந்த பிரிவு மாநகராட்சியால் மரவரி வசூலிக்கப்படுவதை குறிப்பிடுகிறது.

(A) பிரிவு 125 (B) பிரிவு 127

(C) பிரிவு 129 (D) பிரிவு 130

34. As per Tamilnadu Local Fund Audit act 2014/Sec (7) (2) – What is Punishment / Penalty for failure to prepare and present accounts for audit after the expiry of show cause 30 days period?

(A) Rs.1,000 (B) Rs.2,000
(C) Rs.3,000 (D) Rs.5,000

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 / பிரிவு (7), அதன் உட்பிரிவு (2) -இன் கீழ் உரிய நாளுக்கு பின்னர் 30 நாட்களுக்கு மேற்பட்ட நிலையில் கணக்குகள் அளிக்கப்படாததற்கு இயக்குநரால் விதிக்கப்படும் தண்டத்தொகை எவ்வளவு?

(A) ரூ.1,000 (B) ரூ.2,000
(C) ரூ.3,000 (D) ரூ.5,000

35. What is the percentage of village panchayat test audit carried out annually on rotational basis?

(A) 19% (B) 20%
(C) 21% (D) 22%

கிராம ஊராட்சிகளுக்கான தணிக்கை ஆண்டுதோறும் சுழற்சி முறையில் எத்தனை சதவீதம் மேற்கொள்ளப்படுகிறது?

(A) 19% (B) 20%
(C) 21% (D) 22%

36. From which date the Panchayat Union pensioners benefit and Family security scheme was undertaking by the Director of Local Fund Audit Departments?

(A) From 01.04.2013 (B) From 01.10.2013
(C) From 01.04.2018 (D) From 01.10.2018

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் எப்போது முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது?

(A) 01.04.2013 முதல் (B) 01.10.2013 முதல்
(C) 01.04.2018 முதல் (D) 01.10.2018 முதல்

37. What does the Section 20 of the Tamilnadu Local Fund Audit Act 2014 deals with?

(A) In deals about the action to be taken against the loss / defaulcation of fund / stock

(B) Submission of consolidated audit report to legislative assembly

(C) Tells about audit fees

(D) None of the above

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 20 கூறுவது என்ன?

(A) நிதி / இருப்பு கையாளுமையில் இழப்பு மற்றும் கையாடல் ஏற்பட்டால் தொடரப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி

(B) தொகுக்கப்பட்ட தணிக்கை அறிக்கையை சட்டசபைக்கு சமர்ப்பித்தல்

(C) தணிக்கைக் கட்டணம் செலுத்துவது பற்றி

(D) இவற்றில் ஏதுமில்லை

38. With respect to settlement of audit objections what is the monitory limit within which the deputy director is exponent to settle objection as per G.O.Ms.No.328 / Finance / Local Fund / Dept, Dt.10.09.2012

(A) Rs.400/-

(B) Rs.9,500/-

(C) Rs.1,000/-

(D) Rs.15,000/-

அரசாணை நிலை எண்.328/நிதி/உள்ளாட்சி நிதித் துறை/நாள் 10.09.2012-இன் படி வசூலிக்க இயலாத தணிக்கைத்தடை இழப்புத் தொகைகளை துணை இயக்குநரால் தள்ளுபடி செய்ய நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு

(A) ரூ.400/-

(B) ரூ.9,500/-

(C) ரூ.1,000/-

(D) ரூ.15,000/-

39. In internal revision of property tax 2018, no discount was allowed for the building constructed after the year ———— in Chennai Corporation limits?

(A) 2013

(B) 2014

(C) 2015

(D) 2016

சொத்துவரி சீராய்வு 2018-இன் படி சொத்துவரி கணக்கிடுதலில் சென்னை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட கட்டிடங்களுக்கான வயதுக்கான தேய்மானம் எந்த வருடத்திற்கு பிறகு கட்டிய கட்டிடங்களுக்கு கிடையாது

(A) 2013

(B) 2014

(C) 2015

(D) 2016

40. What is the regularisation fees in a town panchayat as per G.O. Ms. No. 172 / housing and urban development (UD 4-3) Dept, Dated 13.10.2017?

(A) Rs.30 / per sqm (B) Rs.40 / per sqm

(C) Rs.50 / per sqm (D) Rs.60 / per sqm

மனைப்பிரிவு வரன்முறை திட்டம் 2017 / அரசாணை (நிலை) எண். 172 / வீட்டுவசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறை (யு.டி.3) துறை/நாள். 13.10.2017-இன் படி மனை வரன்முறைப்படுத்தும் போது வரன்முறை கட்டணமாக பேரூராட்சி பகுதிகளில் வசூலிக்கப்பட வேண்டிய தொகை

(A) ரூ. 30 / ச.மீ. (B) ரூ. 40 / ச.மீ.

(C) ரூ. 50 / ச.மீ. (D) ரூ. 60 / ச.மீ.

41. What is the criteria for the upgradation of a Town Panchayat into special grade Town Panchayat as per G.O. Ms.No.142/M.A.&WS Dept, Dated, 21.11.14?

(A) above 50 lakhs (B) above 1 crore

(C) above 1.5 crores (D) above 2 crores

பேரூராட்சிகள் அவற்றிற்கு கிடைக்கும் சொந்த வருமானத்தின் அடிப்படையில் அரசாணை நிலை எண். 142/ந.நி.(ம)கு.வ.துறை/நாள்,21.11.14-இன் படி சிறப்பு நிலை பேரூராட்சிக்கான தகுதி?

(A) 50 இலட்சத்திற்கு மேல் (B) 1 கோடிக்கு மேல்

(C) 1.5 கோடிக்கு மேல் (D) 2 கோடிக்கு மேல்

42. What is the minimum deposit to be collected for commercial water connection in a Town Panchayat as per S.M.N.G.No.4676/2015 A3/ Dated 26.04.15?

(A) Rs.8,000/- (B) Rs.10,000/-

(C) Rs.7,000/- (D) Rs.90,000/-

பேரூராட்சி இயக்குநர் செ.மு.ந.க. எண். 4676 / 2015 ஆ3 / நாள் 26.04.15-இன் படி பேரூராட்சிகளில் வணிகம் இனத்தில் வசூலிக்க வேண்டிய குடிநீர் இணைப்பிற்கான ஆரம்ப வைப்புத் தொகை எவ்வளவு?

(A) ரூ.8,000/- (B) ரூ.10,000/-

(C) ரூ.7,000/- (D) ரூ.90,000/-

43. The Monetary limit fixed for the Director of Rural Development to write off the loss amount caused to Panchayat union funds due to theft fire (or) other accident is

(A) upto Rs.1,000 (B) upto Rs.5,000

(C) upto Rs.10,000 (D) upto Rs.15,000

தீப்பிடித்தல் (ம) திருட்டு சம்பவங்களால் ஊராட்சி ஒன்றிய நிதிக்கு ஏற்பட்ட நிதியிழப்புத் தொகையினை தள்ளுபடி செய்ய ஊரக வளர்ச்சி இயக்குநரகம் அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தொகை

(A) ரூ.1,000 வரை (B) ரூ.5,000 வரை

(C) ரூ.10,000 வரை (D) ரூ.15,000 வரை

44. What is the monetary limit fixed for a panchayat council to accord administrative sanction for electrical maintenance works?

(A) upto Rs.2 lakh (B) upto Rs.3 lakh

(C) upto Rs.4 lakh (D) upto Rs.5 lakh

கிராம பஞ்சாயத்தில் மூலதனநிதி சம்மந்தபட்ட வேலைகள் மற்றும் மின்பராமரிப்பு சம்மந்தப்பட்ட வேலைகளுக்கான நிர்வாக அனுமதி கிராம ஊராட்சி மன்றத்தால் அனுமதிக்கப்படும் அதிகபட்ச தொகை

(A) 2 இலட்சம் வரை (B) 3 இலட்சம் வரை

(C) 4 இலட்சம் வரை (D) 5 இலட்சம் வரை

45. When was Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme was established in Panchayat Union?

(A) From 2006 (B) From 2008

(C) From 2007 (D) From 2009

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் எந்த ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது?

(A) 2006 முதல் (B) 2008 முதல்

(C) 2007 முதல் (D) 2009 முதல்

46. What is the percentage withheld amount in final bill of a contractor?

(A) 3% (B) 4%

(C) 5% (D) 5% + 1%

பணி முடிக்கும் போது வேலைக்கான முடிவுப் பட்டியலில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய வைப்புத் தொகை சதவீதம்

(A) 3% (B) 4%

(C) 5% (D) 5% + 1%

47. What is the length of carriage way in urban roads?

(A) 3.5 m (B) 3.75 m

(C) 3.0 m (D) 3.25 m

சாலைப் பணிகளில் கேரேஜ் வே என்பது நகர்ப்புற பகுதி சாலைகளில் எத்தனை மீட்டர் அளவு இருக்க வேண்டும்?

(A) 3.5 மீ (B) 3.75 மீ

(C) 3.0 மீ (D) 3.25 மீ

48. What is the name of raw viscosity coating provided over a base while preparing of bitumen road?

(A) Seal coat A (B) Seal coat B

(C) Tack coat (D) Prime coat

தார்ச்சாலை அமைக்கப்படுவதற்கு முன்பாக தார்ச்சாலை அமைவதற்கான மேற்பரப்பின் மீது மெலிதான அளவில் தார்பூச்சு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான பெயர்

(A) சீல்கோட் A (B) சீல்கோட் B

(C) டேக் கோட் (D) பிரைம் கோட்

49. What should be the minimum height of slab culvert?

(A) 1.725 m (B) 1.73 m

(C) 2.775 m (D) 2.77 m

சிறுபாலங்கள் பணியில் சிலாப் கல்வெர்டின் குறைந்தபட்ச உயரம்.

(A) 1.725 மீ (B) 1.73 மீ

(C) 2.775 மீ (D) 2.77 மீ

50. In universities how much percentage of total receipt from distance education shall be transferred to general fund each year?

(A) 10% (B) 15%

(C) 20% (D) 25%

பல்கலைக்கழகங்களின் தொலைதூரக் கல்வியின் மொத்த வரவினத்தில் எவ்வளவு சதவீதம் பொது நிதிக்கு மாற்றப்பட வேண்டும்?

(A) 10% (B) 15%

(C) 20% (D) 25%

51. When was the audit of District Library authority handed over from internal audit to Local Fund Audit?

(A) 2006 (B) 2007

(C) 2008 (D) 2009

அரசுத் துறை தணிக்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்த மாவட்ட நூலக ஆணைக்குழு தணிக்கை எப்போது உள்ளாட்சி நிதித் தணிக்கை வசம் ஒப்படைக்கப்பட்டது?

(A) 2006 முதல் (B) 2007 முதல்

(C) 2008 முதல் (D) 2009 முதல்

52. The highest pludge loan to farmers for the agriculture commodities by the District regulated marketing committed

(A) 75% product (or) Rs.2,00,000 which ever is less

(B) 75% product (or) Rs.2,00,000 which ever is high

(C) 50% product (or) Rs.2,00,000 which ever is less

(D) 50% product (or) Rs.2,00,000 which ever is high

மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உள்ள கிடங்குகளில் உள்ள விளைபொருட்களின் மீது விவசாயிகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச பொருள் ஈட்டுகடன் வசதி எவ்வளவு?

(A) விளைபொருளில் 75% (அ) ரூ.2,00,000 இதில் எது குறைவோ அது

(B) விளைபொருளில் 75% (அ) ரூ.2,00,000 இதில் எது அதிகமோ அது

(C) விளைபொருளில் 50% (அ) ரூ.2,00,000 இதில் எது குறைவோ அது

(D) விளைபொருளில் 50% (அ) ரூ.2,00,000 இதில் எது அதிகமோ அது

53. Ceiling of expenditure fixed to conduct sports by District Panchayat per year is

(A) Rs.10,000/- (B) Rs.15,000/-

(C) Rs.20,000/- (D) Rs.25,000/-

மாவட்ட ஊராட்சியால் ஒரு வருடத்தில் விளையாட்டு போட்டிகளுக்காக மேற்கொள்ளப்படும் உச்சபட்ச செலவினம்

(A) ரூ.10,000/- (B) ரூ.15,000/-

(C) ரூ.20,000/- (D) ரூ.25,000/-

54. Who is the person of official Correspondence between Corporation and the Government is

(A) Mayor (B) Deputy Mayor

(C) Commissioner (D) None of these

மாநகராட்சிக்கும், அரசாங்கத்திற்கும் இடையே அதிகாரபூர்வ தொடர்பில் உள்ள நபர்

(A) மேயர் (B) துணை மேயர்

(C) ஆணையாளர் (D) இவர்களில் யாருமில்லை

55. Which tax is collected as surcharge on railway tickets by the Railway administration?

(A) Entertainment Tax (B) Timber Tax

(C) Pilgrim Tax (D) Education Tax

இரயில்வே நிர்வாகத்தின் மூலம் புகைவண்டி கட்டணத்தின் மீது மேல்வரியாக வசூலிக்கப்படும் வரி இனம் எது?

(A) கேளிக்கை வரி (B) மரவரி

(C) யாத்ரீகர் வரி (D) கல்வி வரி

56. Which one of the following sections of TNDM Act 1920 deals with the provision of wired of time barred tax?

(A) Section 117 (B) Section 118

(C) Section 127 (D) Section 128

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-இன் எந்த பிரிவின் கீழ் வசூலிக்க இயலா வரியினங்கள் மன்றத்தின் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது?

(A) பிரிவு 117 (B) பிரிவு 118

(C) பிரிவு 127 (D) பிரிவு 128

57. Which of the following G.O.s provided for bonus to bill collectors who achieve 100% in Town Panchayat?

(A) G.O.No.504 / Rural Development Dept / Dt.24.06.1987

(B) G.O.No.162 / Finance (Salary) Dept / Dt.22.03.1998

(C) G.O.No.53 / Finance (Allowances) Dept / Dt.09.05.1983

(D) G.O.No.84 / P & AR Dept / Dt.26.03.1995

பேரூராட்சிகளின் முழுமையான அளவில் 100 சதவீதம் வரிவசூல் செய்த வரித்தண்டலருக்கு ஒரு மாத ஊதியம் போனஸ் வழங்கிய அரசாணை எது?

(A) அரசாணை எண்.504 / ஊரக வளர்ச்சித் துறை / நாள் 24.06.1987

(B) அரசாணை எண்.162 / நிதித்துறை (ஊதியப்பிரிவு) / நாள் 22.03.1998

(C) அரசாணை எண்.53 / நிதி (படி) துறை / நாள் 09.05.1983

(D) அரசாணை எண்.84 / பணியாளர் துறை / நாள் 26.03.1995

58. The percentage of amount to be paid by the lessee to conform fisheries lease in Panchayats.

(A) 20% (B) 30%

(C) 35% (D) 40%

ஊராட்சிகளில் மீன் பிடிப்பதற்கான உரிமம் வழங்குவதில் ஏலம் எடுத்தவர் ஏலம் விடும் சமயத்தில் எத்தனை சதவீத தொகையை செலுத்தி உறுதி செய்து கொள்ள வேண்டும்?

(A) 20% (B) 30%

(C) 35% (D) 40%

59. What is the rate of withheld amount on contractor who had not produced Pancard Sec 206 of Income Tax Act 1961?

(A) 10% (B) 20%

(C) 25% (D) 30%

வருமானவரி சட்டம் 1961 பிரிவு 206-இன் படி PAN எண் தராத ஒப்பந்ததாரரிடமிருந்து வழங்கப்படும் தொகையில் இருந்து பிடித்தம் செய்ய வேண்டிய தொகை

(A) 10% (B) 20%

(C) 25% (D) 30%

60. What is the time limit prescribed for the revision of Profession Tax?

(A) once in 6 years (B) once in 3 years

(C) once in 5 years (D) once in 7 years

தொழில்வரி சீராய்வு எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை உள்ளாட்சி நிறுவனங்களால் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்?

(A) ஆறு வருடத்திற்கு ஒரு முறை (B) மூன்று வருடத்திற்கு ஒரு முறை

(C) ஐந்து வருடத்திற்கு ஒரு முறை (D) ஏழு வருடத்திற்கு ஒரு முறை

004/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS – PAPER – I (AUDIT OF LOCAL BODIES / UNIVERSITIES AND OTHER AUDITABLE INSTITUTIONS)

(With Books)

Maximum Time : 1 hour                                                  Maximum Marks : 40

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE
**விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்**

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**[Turn over**

**Answer any EIGHT questions.**

எவையேனும் எட்டு கேள்விகளுக்கு விடையளிக்கவும். (8 × 5 = 40)

1. What are the works to be taken under the surplus funds of Panchayat Union General Fund?

ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதி உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் என்ன?

2. What is mean by Special Audit? And what is mean by Test Audit?

சிறப்பு தணிக்கை என்றால் என்ன? சோதனை தணிக்கை என்றால் என்ன?

3. What are the function of the High level committee for Municipality at District level?

நகராட்சிகளுக்கான மாவட்ட உயர்மட்ட குழுவின் செயல்பாடுகள் என்ன?

4. What are the important Registers maintained in a Regulated Market Committee?

ஒழுங்குமுறை விற்பனை குழுவில் பராமரிக்கப்படும் முக்கிய பதிவேடுகள் யாவை?

5. What are the percentage ceiling prescribed for 1.4.2018 General revision of property tax for the building assessed in the Post Revision period?

1.4.2018 பொது சொத்து வரி சீராய்வில், சீராய்வுக்கு முன் உள்ள காலத்தில் கட்டப்பட்டு வரி விதிப்பு செய்த கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சபட்ச வரி உயர்வு விழுக்காடு என்ன?

6. Match the relevant section of the Tamil Nadu Local Fund Act – 2014, Rules-2016 against the relevant subjects

| | | |
|---|---|---|
| (a) | Transaction audit on the accounts or records of a local authority or local fund relating to retiring or retired period for specific purpose | (1) Sec-9(4) |
| (b) | The Director may call for all the files including the files relating to confidential nature which are not produced to auditors by the E.A. | (2) Sec-7(6)(d)(i) |
| (c) | Non preparation and Non presentation of Annual accounts before the Due date Rs.1,000 Penalty may be imposed | (3) Sec-15(2) |
| (d) | Non Production of Records. The penalty imposed against any person shall be recovered from the salary of the individual and not from the funds of the Local authority or Local Fund. | (4) Sec-3(4) |
| (e) | The Director shall authorize any of his subordinate officers to review, approve and issue audit reports or audit notes of any Local authority or Local funds | (5) Sec-6(e) |

உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் – 2014 விதி – 2016 -ன் கீழ்கண்ட பிரிவிற்கு பொருத்தமான சட்டப் பொருள்களை பொருத்துக

| | |
|---|---|
| (அ) வரவு செலவு தணிக்கை – ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சிறப்பினமாக ஒய்வு பெற்ற (அ) ஓய்வு பெறும் நடவடிக்கைக்காக மேற்கொள்ள | (1) பிரிவு-9(4) |
| (ஆ) இயக்குநரால், மந்தனம் தொடர்பான கோப்புகள் மற்றும் இதர ஆவணங்களை, தணிக்கையாளர்களுக்கு அளித்திட செயல் அதிகாரியை கோரலாம் | (2) பிரிவு -7(6)(d)(i) |
| (இ) ஆண்டு கணக்குகள் தயாரிக்கப்படாமை, நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் அளிக்காத செயலுக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்படலாம் | (3) பிரிவு -15(2) |
| (ஈ) தணிக்கைக்கு ஆவணங்கள் அளிக்காத நபர் (அ) அலுவலரின் ஊதியத்திலிருந்தே அபராதம் விதிக்கப்பட்ட தொகையினை வசூலிக்க வேண்டும். உள்ளாட்சி நிறுவனத்தால் அளித்திட இயலாது | (4) பிரிவு -3(4) |
| (உ) உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கை அறிக்கை (அ) தணிக்கை குறிப்புகளை இயக்குநரால் நியமிக்கப்பட்ட தனது சார் அலுவலர்களால் ஆய்வு செய்து அங்கீகரித்து வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளது | (5) பிரிவு -6(e) |

7. Explain important functions of a Panchayat Union Council.

ஊராட்சி ஒன்றிய குழுவின் முக்கிய பணிகள் என்ன?

8. Write short notes on :

(a) Completion Report

(b) 2-C Tree TAx.

சிறு குறிப்பு வரைக :

(அ) முடிவறிக்கை

(ஆ) 2-சி மர வரி.

9. From the following details make out Bank Reconciliation Statement of a Panchayat Union as on 31.12.2018 to find out the Balance as per the Pass Book.

| | | |
|---|---|---|
| (a) | Closing Balance as cash book as on 31.12.18 | Rs.5,75,000 |
| (b) | Cheque No. 10768 issued on 15.12.18, so far uncashed | Rs.8,000 |
| (c) | Cheque issued for Rs.12,000/- but debited in the Bank only for Rs.10,000/- | |
| (d) | On 16.12.18 wrong credit made by the Bank for Rs.3,500/- | |
| (e) | On 31.12.18, Interest of Rs.1,700/- credited by the bank | |
| (f) | Banking charges debited by the Bank on 31.12.18 for Rs.750/- | |

கீழ்கண்ட விபரங்களின் அடிப்படையில், ஊராட்சி ஒன்றிய கணக்கின் 31.12.2018 ற்கான வங்கி புத்தகத்தக இறுதி இருப்புக்கு ஒத்திசைவு அறிக்கையினை தயாரிக்கவும் :

| | | |
|---|---|---|
| (அ) | 31.12.18-இன் படி ரொக்க புத்தக முடிவிருப்பு | ரூ.5,75,000 |
| (ஆ) | காசோலை எண் : 10768 – 15.12.18-ன் படி ஒப்பந்ததாரருக்கு வழங்கியது. நாளது தேதி வரை காசாக்கப்படாதது | ரூ.8,000 |
| (இ) | ரூ.12,000/- க்கான காசோலை வழங்கியது ஆனால் வங்கியில் ரூ.10,000/- என பற்றெழுதியது | |
| (ஈ) | வங்கியால் ரூ.3,500/- 16.12.18 -ல் தவறாக வரவு வைத்தது | |
| (உ) | 31.12.18 அன்று ரூ.1,700/- வங்கி கணக்கில் வட்டி என வரவெழுதியது | |
| (ஊ) | 31.12.18 -இல் வங்கி கழிவுகள் என ரூ.750/- பற்றெழுதியது. | |

10. Based on the given particulars of a CMDA Limit Town Panchayat – work out the Local Planning Authority contribution due?

| | | |
|---|---|---|
| (i) | Total Income [Based on the A/c of Revenue and Expenditure] : | Rs.2,75,90,000 |
| (ii) | Total Expenditure : | Rs.2,55,70,000 |
| (iii) | Property Tax Arrear Demand Receipts : | Rs.3,00,000 |
| (iv) | Property Tax Current Demand Receipts : | Rs.25,00,000 |
| (v) | Profession Tax Current Demand Receipts : | Rs.10,00,000 |
| (vi) | Profession Tax Arrear Demand Receipts : | Rs.3,00,000 |
| (vii) | Bus stand Toll Arrear Demand Receipts : | Rs.3,00,000 |
| (viii) | Commercial Complex Arrear Demand Receipts : | Rs.5,00,000 |
| (ix) | Commercial Complex Current Demand Receipts : | Rs.11,00,000 |
| (x) | Daily Market Arrear Demand Receipts : | Rs.5,00,000 |
| (xi) | S.F.C. Grant Received : | Rs.50,00,000 |
| (xii) | Scheme overhead charges : | Rs.11,00,000 |
| (xiii) | Prior year Income : | Rs.2,00,000 |
| (xiv) | Property Tax Current Demand Balance : | Rs.4,00,000 |
| (xv) | Weekly Market Current Demand Balance : | Rs.2,00,000 |
| (xvi) | Profession Tax Current Demand Balance : | Rs.1,00,000 |

கீழ்கண்ட தகவல்களின் அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லை பகுதியில் அமைந்துள்ள ஒரு பேரூராட்சியின் உள்ளூர் திட்டக் குழு பங்குத்தொகையினை தெரிவிக்கவும்.

| | | |
|---|---|---|
| (i) | மொத்த வருவாய் : (வருவாய் மற்றும் செலவின கணக்கின்படி) | ரூ.2,75,90,000 |
| (ii) | மொத்த செலவினங்கள் : | ரூ.2,55,70,000 |
| (iii) | சொத்து வரி – நிலுவை கேட்பின் வரவுகள் | ரூ.3,00,000 |
| (iv) | சொத்து வரி – நடப்பு கேட்பின் வரவுகள் | ரூ.25,00,000 |
| (v) | சொத்து வரி – நடப்பு கேட்பின் வரவுகள் | ரூ.10,00,000 |
| (vi) | தொழில் வரி – நிலுவை கேட்பின் வரவுகள் | ரூ.3,00,000 |
| (vii) | பேருந்து நிலைய சுங்க நிலுவை கேட்பு வசூல் | ரூ.3,00,000 |
| (viii) | வணிக வளாக நிலுவை கேட்பு வசூல் | ரூ.5,00,000 |
| (ix) | வணிக வளாக நடப்பு கேட்பு வசூல் | ரூ.11,00,000 |
| (x) | தினசரி மார்கட் நிலுவை கேட்பு வசூல் | ரூ.5,00,000 |
| (xi) | மாநில நிதி குழு மான்ய வரவுகள் | ரூ.50,00,000 |
| (xii) | திட்ட மேற்பார்வை கட்டணங்கள் | ரூ.11,00,000 |
| (xiii) | முந்தைய ஆண்டுகளுக்கான வரவுகள் | ரூ.2,00,000 |
| (xiv) | சொத்துவரி நடப்பு கேட்பு நிலுவை | ரூ.4,00,000 |
| (xv) | வார சந்தை நடப்பு கேட்பு நிலுவை | ரூ.2,00,000 |
| (xvi) | தொழில்வரி நடப்பு கேட்பு நிலுவை | ரூ.1,00,000 |